அவருடைய அரசு வருக என்று நாம் மன்றாடவேண்டும். அவர் நம் தேவைகளை நிறைவுசெய்வார் என்று நாம் நம்புகிறோம். நம் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்கிறோம். மேலும் தீயோனிடமிருந்து நம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுகிறோம். இந்த இறைவேண்டல் கடவுளுடனான நமது தொடர்புக்கு ஒரு முன்மாதிரியாக செயல்படுகிறது. இது வழிபாடு, மன்றாட்டு, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பரிந்துரை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

லூக்கா நற்செய்தியில் இயேசு விடாமுயற்சியுள்ள நண்பரின் உவமையைக் கூறுகிறார். கடவுள் தம்மை ஆர்வத்துடன் தேடுபவர்களின் இறைவேண்டல்களைக் கேட்டுப் பதிலளிக்கிறார் என்பதை விளக்குகிறார். இது கடவுளிடம் அசைக்கமுடியாத நம்பிக்கையோடு அணுகிடவும், அவர் தமது சரியான நேரத்தில் பதிலளிப்பார் என்று நம்பிக்கைக் கொள்ளவும் நமக்குக் கற்பிக்கிறது.

திருத்தூதர் பவுல் 1 தீமோத்தேயு 2:1-12 இல் பரிந்துபேசும் இறைவேண்டலை வலியுறுத்துகிறார். நம்பிக்கையாளர்கள், அரசர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் உட்பட அனைத்து மக்களுக்காகவும் இறைவேண்டல் செய்ய வலியுறுத்துகிறார். இதனால் நாம் அமைதியான மற்றும் தெய்வீக வாழ்க்கையை வாழமுடியும். இத்தகைய இறைவேண்டல்கள் வெறும் வேண்டுகோள்கள் அல்ல, மாறாக மற்றவர்களின் வாழ்க்கையில் கடவுளின் தலையீட்டை மன்றாடி அழைக்கும் நம்பிக்கைச் செயல்கள்.

தொடக்கநூல் அதிகாரம் 18 இல் ஆபிரகாம் சோதோம் மக்களின் சார்பாக கடவுளிடம் பரிந்துரை செய்து நகரத்தைக் காப்பாற்ற வெற்றிகரமாகப் பரிந்துபேசுகிறார். , மற்றவர்களுக்காக பரிந்து இறைவேண்டல் செய்வதால் நிகழும் மாற்றத்தை நாம் காண்கிறோம். அதேபோல், நமது பரிந்துரையின் மூலம், கடவுள் நீதிமான்களைக் காப்பாற்றவும், நோயுற்றோரைக் குணப்படுத்தவும், அனைத்து வகையான ஆபத்துகளிலிருந்தும் தம்முடையப் படைப்பைப் பாதுகாக்கவும் முடியும். நாம் இறைவேண்டலில் விடாமுயற்சியுடன் இருந்தால், “ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்” என்று மகிழ்ச்சியுடன் சாட்சியமளிப்போம்.

எனவே, நம் அன்னை பூமிக்காகத் தொடர்ந்து வேண்டுவோம். அழகு, புரிந்துகொள்ள சிக்கலான தன்மை மற்றும் நோக்கம் கொண்ட உலகில் கடவுளின் கண்களால் இந்த அழகைக் காண, அனைத்து மனிதகுலமும் கற்றுக்கொள்ளட்டும். கடவுள் படைத்த அனைத்தையும், செயல்படச்செய்யவும், பாதுகாக்கவும், வளர்க்கவும் நம் இதயங்கள் தூண்டப்படட்டும். நிலையான முறையில் வாழ்வதன் மூலமும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் கொள்கைகளுக்காக வாதிடுவதன் மூலமும் பூமியின் உண்மையுள்ள பணியாளர்களாக நாம் நமது பங்கை நிறைவேற்றுவோம். அவ்வாறு செய்வதன்மூலம் தம்முடைய படைப்பின் பராமரிப்பை நம்மிடம் ஒப்படைத்த கடவுளை நாம் மதிக்கிறோம். மேலும் உலகில் அவரது மீட்பின் பணியிலும் பங்கேற்கிறோம்.

> ஆண்டவருடைய இறைவேண்டல், அனைத்து இறைவேண்டல்களிலேயே மிகவும் நேர்த்தியான இறைவேண்டல். அதில் நாம் நாம் விரும்பும் அனைத்து கருத்துகள் இருப்பது மட்டுமல்ல; அவை விரும்பப்பட வேண்டிய வரிசையிலும் அமைந்துள்ளது.
>
> புனித தோமஸ் அக்வினாஸ்

**இன்றைய இறைவார்த்தை:**

தொடக்கநூல்: 18:20-32

திருப்பாடல்: 138: 1-3, 6-8

கொலோசையர்: 2: 12-14

லூக்கா 11: 1-132

INTERNAL CIRCULATION ONLY
BUL 30/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு | 27 ஜூலை 2025
(உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம்)

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சூழலியல் பணித்துவம்
வளங்கள் களவாடப்படுவதையும் சுரண்டப்படுவதையும் தடுத்திட அழைப்பு

## விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, இறைவேண்டலின் உருமாற்ற சக்தி

இறைவேண்டல் கடவுளின் இதயத்தைத் திறக்கும் திறவுகோலாக செயல்படுகிறது. இன்று மூன்று அத்தியாவசிய பாடங்களை இயேசு தம்முடைய போதனையின் வழியாக நமக்குத் தருகிறார். ஆண்டவருடைய இறைவேண்டல், இறைவேண்டலில் விடாமுயற்சியின் முக்கியத்துவம், மற்றும் பரிந்துரை இறைவேண்டலின் அவசியம் பற்றி தனது போதனைகளின் மூலம் இறைவேண்டல் என்னும் திறவுகோலை நமக்கு வழங்குகிறார்.

ஆணடவருடைய இறைவேண்டல், ஆராதனை, பரிந்துரை, பாதுகாப்பு, கடவுளின் விருப்பத்தின்படி நம் இதயங்களை இணைக்க நம்மை வழிநடத்துகிறது. ஒவ்வொரு முறை நாம் இறைவேண்டல் செய்யும்போதும், நமது வேண்டல், இந்த இறைவேண்டலைப் போல இருக்கவேண்டும்.

